1980 பிப்ரவரி 7]

திரு. ஜே. ஜேம்ஸ்: ஓமியோபதி பயிற்சி பெற்ற டாக்டர்கள் தேவைக்குப் போதுமான அளவுக்கு இல்லை. பயிற்சி அளிப்பதற்கு அரசு ஒரே ஒரு மருத்துவக் கல்லூரிதான் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் ஓமியோபதி கல்லூரிகள் அமைக்க அரசு தேவையான நிதி உதவியை அளிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தற்போது அந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

திருப்பாலைக்குடியிலுள்ள ஒன்றிய மருத்துமனை

*வினா எண். 99—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா, திருப்பாலைக்குடியில் உள்ள ஆர். எஸ். மங்கலம் யூனியன் ஹோமியோபதி மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: அத்தகைய வேண்டுகோள் மக்களிடமிருந்து வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அந்த மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று கோவிந்தமங்கலம் ஊராட்சித் தலைவர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அது ஒன்றுதான் இதுவரை அரசுக்கு வந்திருக்கிறது. தற்போது அதை மாற்றுவதாக இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மற்ற பல யூனியன்களில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டு நடத்துவதற்கு ஆர்டர் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஏன் ராஜசிங்கமங்கலத்தையும் எடுத்துக் கொள்ளக் கூடாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: படிப் படியாக ஊராட்சி மன்றங்களிலுள்ள மருத்துவ மனைகளை அரசு ஏற்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் தற்போது அரசு ஒவ்வொன்றாக எடுத்து வருகிறது. அந்த வகையில் இதையும் எடுத்துக் கொள்ள அரசு ஆலோசனை செய்யும்.

திருச்சிராப்பள்ளி பொது மருத்துவமனை.

*வினா எண். 100—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:

(அ) திருச்சியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள், செவிலியர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) திருச்சி பொது மருத்துவமனையில் எந்த எந்த பிரிவுகளில் வைத்திய வசதிகள் உள்ளன?

(இ) இந்த மருத்துவமனையை மேலும் விரிவாக்க ஏதேனும் திட்டம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் :</u>

(அ) இம் மருத்துவமனையில் 51 உதவி மருத்துவ அதிகாரிகள் (CIVIL ASSISTANT SURGEONS) பணியாற்றுகிறார்கள். இதில் 10 மருத்துவ அதிகாரிகள் பணியிடை விடுப்பு பதவிகளும் (RESERVE DUTY POSTS) அடங்கும்.

இதைத் தவிர மாவட்ட தொழுநோய் நிவாரண மருத்துவ அதிகாரியும், மருந்துகளில் சிறப்புப் பட்டம் பெற்ற மருத்துவர் ஒருவரும் பணியாற்றி வருகின்றனர். இங்கு பணியாற்றும் செவிலியர்களின் எண்ணிக்கை 92.

(ஆ) கதிரியக்கப் பிரிவு, இரத்த சேமிப்பு நிலையம், மற்றும் பல்நோய் சிகிச்சை, மனநோய் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சை, முடநீக்கவியல் சிகிச்சை, சிசு நோய் சிகிச்சை. கண் நோய் சிகிச்சை, பால்வினை நோய் சிகிச்சைக்கான பிரிவுகளில் வைத்திய வசதிகள் அளிக்கப்படுகின்றன.

(இ) தற்போது இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.

<u>திரு. கே. செளந்திரராசன் :</u> திருச்சி மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் எத்தனை பேர்? அதிலே இப்போது பணியாற்றுகிறவர்கள் எத்தனை பேர்? காலியாக இருக்கும் இடங்கள் எத்தனை? அதை நிரப்புவதற்கு இந்த அரசாங்கம் எவ்வாறு விரைந்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் ;</u> மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் 41 பேர். இப்போது 41 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது தவிர விடுப்பு மருத்துவர்கள் என்ற நிலையிலேயே பத்து பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)